## முதலாம் இணைப்புப்பட்டியல்

## பகுதி–A

(9-ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவைக் காணவும்)

### நூற்றுக்கு 1 விழுக்காடு வீதத்தில் வரிவிதிக்கத்தக்க பொருட்கள்

| வரிசை எண் | பொருள்களின் விவரம் |
|---|---|
| 1 | தங்கம், வெள்ளி கட்டிகள் அதாவது தங்கம், வெள்ளி விழுப்பொன் ஆகியவற்றின் பாளமும், சுத்தமானதாயினும், கலவையாயினும் நாணயமாக அடிக்கப் பெறாதவை, மற்றும் பாலறாமாறல் வெள்ளியும், கோரா தங்கமும் உள்ளடங்கலான நாணய வகை. |
| 2. | தங்கம், வெள்ளி, முத்துக்கள், நோபிள் உலோகங்கள், (பிளாட்டினம், இரிடியம், ஒஸ்மியம், பலாடியம், ரோடியம் மற்றும் ருதேனியம்) மற்றும் அவற்றால் செய்யப்பட்ட நகைகள் மற்றும் ஓரளவு விலையுயர்ந்த கற்கள்; மற்றும் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட பொருள்கள்; |
| 3 | விலை மதிப்புள்ள கற்கள், அதாவது வைரங்கள், மரகதக் கற்கள், கெம்புக் கற்கள், இயற்கையான அல்லது செயற்கை முத்துக்கள், வைடூரியம், நீலமணிக்கற்கள், மாணிக்கம் அல்லது செம்மணிக்கல், பவளம், கோமேதகம், புஷ்பராகம் மற்றும் பிற ஓரளவு விலையுயர்ந்த கற்கள், செயற்கை ரத்தினகற்கள் அவை தனியாக விற்கப்படுவதாயினும் அல்லது வேறு பொருள் அல்லது ஆபரணங்களில் ஒரு பகுதியாகப் பதிக்கப்பட்டு விற்கப்படுவதாயினும். |
| 4. | தேய்ந்த அல்லது பழுதடைந்த நகைகள் |

## பகுதி –B

## (3–ஆம் பிரிவின் 2–ஆம் உட்பிரிவைக் காணவும்)

### நூற்றுக்கு 4 விழுக்காடு வீதத்தில் வரிவிதிக்கத்தக்க பொருட்கள்

| வரிசை எண் | பொருட்களின் விவரம் |
|---|---|
| 1 | இந்த இணைப்புப் பட்டியலின்படி திட்டவட்டமாக உள்ளடக்கப்பட்டவையல்லாத பிற, அனைத்து வகையான அமிலங்களும் இரசாயனங்களும் |
| 2 | மனித ஆற்றலால் இயங்காத அல்லது மிருகங்களால் இயக்கப்படாத வேளாண் உபகரணங்கள், திவலைப் பீற்றிகள், தெளிப்பான்கள் மற்றும் சொட்டுநீர் பாசன சாதனங்கள் மற்றும் அவற்றின் பாகங்களும் துணைக்கருவிகளும் |
| 3 | (a) (நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப் பட்டவையல்லாத) அனைத்து வகையான நூலிழைகள்<br>(b) மருத்துவ அறுவை தையல் நூல் இழைகள் நீங்கலான இயற்கையானதோ அல்லது செயற்கையானதாகவோ உள்ள அனைத்து வகை தையல் நூல் இழைகள்<br>(c) அனைத்து வகை நூல் இழை மற்றும் தையல் நூல் இழைக் கழிவுகள் |
| 4 | விலையுயர்ந்த உலோகத்தாலானவையல்லாத பிரஷர் குக்கர்கள் மற்றும் உலோகத்தட்டுகள் உள்ளடக்கிய நான்காம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பாத்திரங்கள் அனைத்தும் |
| 5 | வலுவூட்டிய எஃகினால் ஆன அலுமினியக் கடத்தி (ACSR) |
| 6 | அடைக்காய் வெற்றிலை பாக்கு, வாசனைப் பாக்கு மற்றும் வறுக்கப்பட்ட வாசனையான சீவல் மற்றும் பாக்குத்தூள் |
| 7 | (a) தங்கமுலாம் பூசப்பட்ட (Rolled Gold) மற்றும் தங்கம் போன்று போலியாகச் செய்யப்பட்ட பொருள்கள் மற்றும் நகைகள்<br>(b) அலங்கார போலி ஆபரணங்கள் |
| 8 | வணிகச் சின்னமுடன் அல்லது வணிக சின்னம் இல்லாமல் விற்கப்படும் பன், ரஸ்க், பிஸ்கோத்து மற்றும் கேக் உள்ளிட்ட பேக்கரி பொருள்கள் |
| 9 | மூங்கில் |
| 10 | தாவரப் பட்டை, உலர்ந்த தாவரம் மற்றும் உலர்ந்த மலர்கள் |
| 11 | மூல குரோமியம் சல்பேட், சோடியம் பைகுரோமேட் மற்றும் வெளுப்புத் திரவம் |
| 12 | உராய்தலை தாங்கும் உருள் குண்டுகள் |
| 13 | பருத்தி அல்லது இலவம் பஞ்சினாலான மெத்தைகள், தலையணைகள் மற்றும் மெல்லிய மெத்தைகள் |
| 14 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப் பட்டவையல்லாத பிற மெத்தை விரிப்பு, தலையனை உறை மற்றும் பிற ஆயத்த ஆடைகள் |
| 15 | பீடி இலைகள் |
| 16 | இடை வார்கள் |
| 17 | தாவரக் கழிவுக் கட்டிகள் |
| 18 | நிலக்கீல் |
| 19 | கருங்கல் ஜல்லி |
| 20 | செருகுக் கம்பிகள், திருகுமறையாணி, திருகாணி மற்றும் திருகு நிலைக் கருவி |

| | |
|---|---|
| 21 | எலும்புத்தூள் உரம் |
| 22 | (a) சாம்பல் தூள் செங்கற்கள், சுட்ட செங்கற்கள், புகைக்கீல் கூரை, மண் ஓடுகள் மற்றும் ஒரு சீரான சுட்ட செங்கற்கள் உள்ளடங்கலான அனைத்து வகையான செங்கற்கள்<br>(b) செங்கல் துண்டுகள், செங்கல் உடைகற்கள், உள்துளையான செங்கல் பாளங்கள், உள்துளையான சிமெண்ட் பாளங்கள்<br>(c) நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத வேகவைத்த சுடப்பட்ட களிமண்ணில் செய்யப்பட்ட மற்றும் இயந்திரத்தாலோ அல்லது கையினாலோ செய்யப்பட்ட நாட்டு செங்கற்கள் மற்றும் நாட்டு ஓடுகள் மற்றும் மாக்கல் பண்டம்<br>(d) (a) முதல் (c) வரையிலான இனங்களின் உடைசல் துண்டுகள் |
| 23 | (விலையுயர்ந்த உலோகமல்லாத), இரும்பு, எக்கு அல்லது பிளாஸ்டிக் அல்லது பிற உலோகங்களாலான வாளிகள் மற்றும் குடங்கள் |
| 24 | கற்பூரம் |
| 25 | இச்சட்டத்தின் **2(11)** எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட மூலதனப் பொருள்கள் |
| 26 | (a) நீர் பயன்பாட்டுக்கான மைய விலக்கு மற்றும் மோனாபிளாக் பம்புகள், மற்றும் நீர் மூழ்கி பம்புகள் மற்றும் அவற்றின் பாகங்கள்<br>(b) **3** மற்றும் **5** குதிரைச்சக்தியுடைய பம்ப் செட்டுகள் |
| 27 | (i) இரசாயன உரங்கள்<br>(ii) புழுபூச்சிக் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள், கொறி விலங்கு கொல்லிகள், நோய் நுண்மக் கொல்லிகள், களைக்கொல்லிகள், பூஞ்சனக் கொல்லிகள், மூலிகைக் கொல்லிகள் மற்றும் அவற்றின் கலவைகள், கணைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், தாவர ஊட்டச் சத்துக்கள், மைக்ரோ ஊட்டச்சத்துக்கள், தாவர உரங்கள், நோய் எதிப்பான்கள் மற்றும் அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம்<br>(iii) பூச்சி விரட்டிச் சுருள்கள், வில்லைகள், திரவங்கள் மற்றும் பூச்சுப் பசைகள்<br>(iv) பூச்சிகளை வெறுத்து ஒதுங்கச் செய்யும் வில்லைகளுடன் பயன்படுத்தப்படும் சூடேற்றும் சாதனங்கள் உள்ளடங்லான கொசு ஒழிப்பான்களும், பூச்சிக் கொல்லி சாதனங்களும் மற்றும் அனைத்து வகையான கொசு வலைகள் |
| 28 | சுட்டக்களிமண், நேர்த்தியான சீனாக்களிமண் மற்றும் உருண்டை வடிவான களிமண் உள்ளடங்கலான களிமண் |
| 29 | கரி தார் |
| 30 | காபி கொட்டைகள் மற்றும் விதைகள், கொக்கோ நெற்றும் கொட்டைகளும் மற்றும் சிக்கரி |
| 31 | நாரால் ஆன மெத்தை நீங்கலான நார் தயாரிப்புகள் |
| 32 | வண்ணப்பெட்டிகள் (Colour Boxes), வண்ணக்குச்சிகள் (Crayons), பூச்சுப் பெட்டிகள், நீர்வண்ணப் பூச்சுகள், வில்லைகள் வடிவிலோ அல்லது திரவ வடிவிலோ உள்ள எண்ணெய்ப் பூச்சுகள் , அதனில் பயன்படுத்தப்படும் வரைவுப் பலகைகளும் தூரிகளும் |
| 33 | சீப்புகள் |
| 34 | தனியார் கிளை இணைப்பகம் (PBX) மற்றும் மின்னணு தனியார் தானியங்கி இணைப்பகம் போன்ற (EPABX) தகவல் தொடர்பு சாதனங்கள் |
| 35 | கணினி எழுது பொருட்கள் |

| | |
|---|---|
| 36 | சிற்றில் பாலாடைக் கட்டி |
| 37 | பஞ்சுக் கழிவு |
| 38 | உலோக உருக்கு மட்கமலம் |
| 39 | காகித மற்றும் பிளாஸ்ட்டிக் கிண்ணங்கள், டம்ளர்கள் மற்றும் தட்டுகள் |
| 40 | பொருள் வழங்கு மூன்று சக்கர வண்டிகள், சிறுவர்களின் மூன்று சக்கர மிதிவண்டிகள், பெட்டி வண்டிகள், இணை இருக்கை மிதிவண்டிகள், மிதிவண்டிகள் இணைப்புகள் உள்ளடங்கலான மிதிவண்டிகள், இருசக்கர மிதிவண்டிகள் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் அவற்றோடு பயன்படுத்தப்படும் உருளிகள், உருளிப்பட்டைகள், தொங்கல்பட்டை உறைகள், மிதிவண்டி இருக்கை உறைகள், மிதிவண்டி பூட்டுகள், மிதிவண்டி டைனமோ விளக்குகள் மற்றும் மிதிவண்டி காற்றடைப்பான்கள் உள்ளிட்ட பாகங்களும் துணைக்கருவிகளும் |
| 41 | இணைப்புப்பட்டியல்களில் எவற்றிலும் குறித்துரைக்கப்பட்டவையல்லாத, **1956**ம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் **14**–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட விளம்பப்பட்ட பொருட்கள் |
| 42 | சணலில் ஆன கதவடி விரிப்புகள், கைவினைப் பொருள்கள், மேசை விரிப்புகள் மற்றும் சுவர் அலங்காரப் பொருள்கள் |
| 43 | தூப ஊதுவத்தி மற்றும் அகர்பத்தி |
| 44 | மருந்துச் சரக்குகளுக்கான உரிமத்தின்படி தயாரிக்கப்பட்ட அம்மைத் தடுப்பூசிகள் விசைப் பீற்று மருந்தூசிகள், காயக்கட்டுத்துணிகள், மருந்து களிம்புகள், மருந்துச் சரக்குகளும் மருந்துகளும் ஐ.பி. தர நிலையிலுள்ள மென் திரவ பாரஃபின் மெழுகு. |
| 45 | சாயங்கள், அதாவது,– (i)அமிலச்சாயங்கள், (ii)செஞ்சாயங்கள், (iii)காரங்கள், (iv) அடிப்படைச் சாயங்கள், (v) நேரடிச் சாயங்கள், (vi)நாப்தால்ஸ், (vii)நைலான் சாயங்கள், (viii) ஒளிரும் வெண்ம இயக்கிகள், (ix) பிளாஸ்டிக் சாயங்கள், (x) மாற்று விளைவுச் சாயங்கள், (xi) கந்தகச் சாயங்கள், (xii) ஊறவைப்புச் சாயங்கள், (xiii) பிற சாயங்கள் அனைத்தும் |
| 46 | மின் முனைகள் மற்றும் பற்றாசுக் கம்பிகள் |
| 47 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பயிற்சிப் புத்தகம், வரைகட்டப் புத்தகம் மற்றும் ஆய்வக நோட்டுப் புத்தகம். |
| 48 | பாலூட்ட உதவும் கண்ணாடி புட்டிகள், பால்புட்டிக் காம்புகள் |
| 49 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத அனைத்து வகை நார்கள் மற்றும் நார்க்கழிவுகள் |
| 50 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத சாம்பல் துகள்கள், அனைத்து வகையான கரிச்சாம்பல் மற்றும் சாம்பற்கட்டி |
| 51 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத வணிகச் சின்னம் இல்லாமல் விற்கப்படும் உடனடி உணவுகள், தேங்காய் பால், மாவு, ஊறுகாய்கள், இனிப்புகள், பாலாடைக் கட்டி, மிட்டாய்கள், சாக்லேட்டுகள், திண்பண்டங்கள் உள்ளடங்கலான உணவுகள், உணவு தயாரிப்புகள் மற்றும் கலந்த உணவுகள் மற்றும் சிப்ஸ் மற்றும் பாப்கான் போன்ற கார வகைகள் |
| 52 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத வறுத்த மற்றும் பொறித்த கடலை, பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு , மிளகாய், தனியா, மஞ்சள், சிகைக்காய் மற்றும் சிகைக்காய் தூள், வெல்லத் தூள் மற்றும் நாட்டுச் சர்க்கரை உள்ளிட்ட வெல்லம் மற்றும் வெல்லப்பாகு |
| 53 | வறுத்த வேர்க்கடலைப் பருப்பு |
| 54 | கண்ணாடி மணிகள் மற்றும் கண்ணாடி குண்டுகள் (கோலிக் குண்டு) |
| 55 | பழைய அல்லது பயன்படுத்தப்பட்ட கண்ணாடிக் குடுவைகள் |

| | |
|---|---|
| 56 | குளுகோஸ் |
| 57 | (i) பூ வேலைப்பாடுடன் கூடிய கையினால் தயாரிக்கப்பட்ட பொருள்கள்<br>(ii) கையினால் தயாரிக்கப்பட்ட காகித அட்டைகள் உள்ளடக்கிய கையினால் தயாரிக்கப்பட்ட காகிதம்<br>(iii) அனைத்து வகைகளிலும் அனைத்து வடிவங்களிலுமான கையினால் தயாரிக்கப்பட்ட கடல் வண்ண நீலம், கையினால் தயாரிக்கப்பட்ட துவைப்பு நீலம், கையினால் தயாரிக்கப்பட்ட ராபின் நீலம் ,கையினால் தயாரிக்கப்பட்ட சலவை வெளுப்பான்கள் |
| 58 | (i) சிகைக்காய், பூந்திக்கொட்டை, இலுப்பைப் பிண்ணாக்கு, பூலான் கிழங்கு, உசிலை இலைகள், கஸ்தூரி மஞ்சள் ஆகியன அடங்கிய முடி மற்றும் உடலை சுத்தப்படுத்தும் தூள்கள் மற்றும் அவற்றுடன் சேர்க்கப்படும் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட பகுதிப் பொருள்கள்<br>(ii) வணிகச்சின்னம் இடப்பட்டவையல்லாத தேய்த்துக் கழிவு சுத்தமாக்கும் தூள்கள் மற்றும் கையினால் செய்யப்பட்ட சோப்புகள் மற்றும் தலை நீவு நுரைமங்களும் |
| 59 | தலைக் கவசங்கள் |
| 60 | (i) தேன் (ii) தேன் மெழுகு |
| 61 | (i) பின்னலாடை பொருள்கள் (ii) ஜவுன்னாதிப் பொருள்கள் |
| 62 | (i) மனித முடி (ii) செயற்கை சிகை அணி |
| 63 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத தானியங்கள் பருப்புகள் மற்றும் பயறுகள் ஆகியவற்றின் உமி மற்றும் தவிடு |
| 64 | பனிக்கட்டி |
| 65 | வணிகச் சின்னம் இடப்படாத ஐஸ்கிரீம் |
| 66 | தொழிற்சாலை மின் கம்பிவடங்கள் (உயர் அழுத்தமின் கம்பி வடங்கள், எக்ஸ்எல்பிஇ மின் கம்பி வடங்கள், ஜெல்லி நிரம்பிய மின்கம்பி வடங்கள், கண்ணாடி இழைக்கம்பி) |
| 67 | இம்மாநிலத்தில் பொருள்களைத் தயாரிப்பது தொடர்பாகப் பயன்படுத்தப்படுவதற்கான அரசினால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான தொழிலக உள்ளீட்டுப் பொருள்கள் மற்றும் கட்டுகைப் பொருள்கள் மற்றும் பெயரிடு சீட்டுகள் |
| 68 | அரசினால் அறிவிக்கை செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள். |
| 69 | இன்சுலேட்டர்கள் (Insulators) |
| 70 | பதிப்புரிமை, தனிக்காப்புரிமை, ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் போன்ற தொட்டுணர முடியாத பொருள்கள். |
| 71 | உலோக இழை, உலோக சரிகை இழை, உலோக பிளாஸ்டிக் இழை, செயற்கை ஜவ்வு இழை மற்றும் ஒளிரும் இழை உள்ளடங்கிய அனைத்து வகை சரிகைகள் |
| 72 | பொதுப் பங்கீடு முறையில் விற்கப்படும் மண்ணெண்ணெய் |
| 73 | கோயா / கோஆ |
| 74 | பின்னலுக்குப் பயன்படும் கம்பளி நூல் |
| 75 | லேக் மற்றும் செல்லாக் |
| 76 | (i) எலுமிச்சை புல் எண்ணெய் (ii) புன்னை எண்ணெய் (iii) இஞ்சிப்புல் எண்ணெய் |
| 77 | நீலக்கீலில் காகிதப் பாயை நனைத்து தயாரிக்கப்பட்ட இலகு மேற்கூரைத் தகடுகள் |
| 78 | நிலக்கரி |
| 79 | லீனியர் ஆல்கலி பென்சீன் (LAB), சல்ஃபோனிக் ஆசிட் மற்றும் அல்ஃபாஒலிஃபின் மற்றும் சல்ஃபோனேட் |
| 80 | மக்காச் சோளத் தயாரிப்புகள் |

| | |
|---|---|
| 81 | மருத்துவ உபகரணங்கள், கருவிகள் மற்றும் புகுத்திகள் |
| 82 | பால் உணவு மற்றும் பால் உணவு தயாரிப்புகள், (தகரக் கொள்கலனில், கண்ணாடி அடைப்பான்களில் அடைக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்ட மணமூட்டப்பட்ட பால் மற்றும் ஆடை நீக்கப்பட்ட பால் பொடி உள்ளடங்கியது), குழந்தைப் பால் உணவு, பனீர் (Paneer) பால்பொடி மற்றும் UHT பால் |
| 83 | கலப்பு பிவிசி மின் நிலைப்படுத்தும் கருவி |
| 84 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத வார்ப்பு செய்யப்பட்ட பிளாஸ்டிக் காலணிகள், உறவாய்ச் செப்பல்கள் மற்றும் அவற்றின் பட்டைகள் |
| 85 | நேபா கற்பலகைகள் (தரைத் தளத்திற்கு பதிக்கப்படும் கற்கள்) |
| 86 | அந்து உருண்டைகள் |
| 87 | நேவார்ஸ் |
| 88 | வணிகச் சின்னம் இடப்படாது விற்கப்படும் போதை ஊட்டப்படாத பானங்கள் |
| 89 | (i) இரும்பு அல்லாத உலோகம், உலோகக் கலவைகள்<br>(ii) விளம்பப்பட்ட பொருட்களின் கீழ் வருபவை அல்லாத அனைத்து வகையான மற்றும் அனைத்து தரநிலையான உலோக பசை மற்றும் உலோகக் கழிவுகள் உள்ளடங்கிய உலோகத்தூள்கள்<br>(iii) அனைத்து உலோக வார்ப்படங்கள்<br>(iv) அலுமினியம், தாமிரம் மற்றும் துத்தநாகம் போன்ற இரும்பு அல்லாத உலோகங்களின் எக்ஸ்ட்ருசன்ஸ் (Extrusions) |
| 90 | மீனவர்கள் பயன்படுத்தும் இயந்திரமற்ற படகுகள் |
| 91 | ஓட்ஸ் (Oats) |
| 92 | 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 74/1956) பிரிவு 14–இல் குறித்துரைக்கப்பட்டவையல்லாத எண்ணெய்வித்துக்கள் |
| 93 | தாதுப் பொருட்கள் மற்றும் கனிமங்கள், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்பு டெமோலைப் பொருள்கள் |
| 94 | அடைக்கும் பெட்டிகள், கார்க்குகள், கார்க் ஷீட்டுகள் உள்ளடங்கலான சிப்பம் கட்டும் பொருள்கள், கோணிப்பைகள், HDPE / PP –யினால் நெய்யப்பட்ட பட்டைகள், HDPE/ PP–யினால் நெய்யப்பட்ட சுருள்பட்டைகள் மற்றும் நெய்யப்பட்ட துணிகள், ஹெறசைன் துணி, ஹெறசைன் கொண்ட காகிதம், பாலிதீன் மற்றும் ஹெறசைன் கொண்ட காகிதம், உயர் அடர்த்தி கொண்ட பாலிதீன், துணி அடங்கிய காகிதம் மற்றும் நீர் புகாத தார் பூசப்பட்ட காகிதம், சணல் கயிறு, LDPE பிளாஸ்டிக் பால் பைகள் உள்ளடங்கலான பாலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பைகள், தகர அடைப்புகள், மரவடை அடுக்ககள், தேயிலை பெட்டிகள், மரப்பெட்டிகள், மரச் சீவல்கள், மரத் தாங்கிகள், கம்பிவடம் சுற்றும் மரத்தினால் ஆன உருளைகள் அல்லது அரசினால் இதுகுறித்து அறிவிக்கை செய்யப்படும் பிற பொருள்கள்,<br><br>விளக்கம்:- இந்த இனத்தின் நோக்கத்திற்காக பலகைகள், நீள்சதுரத் துண்டுகள், மரத்துண்டுகள் ஆகியவற்றை சேர்த்துச் செய்யப்படும் தேயிலை பெட்டிகளோ அல்லது சிப்பம் கட்டும் பெட்டிகளோ ‘‘சிப்பம் கட்டப்பட்ட பெட்டிகளின்’’ கீழ்வரும் |
| 95 | பனைக் கொழுப்பு அமிலம் |

| | |
|---|---|
| 96 | அனைத்துவகை காகிதங்கள், காகித போர்டு மற்றும் செய்தித்தாள்கள், கழிவுத் தாள்கள் |
| 97 | உணவு நிலைத் தரம் நீங்கலாக தரமான மெழுகும் தீப்பெட்டி மெழுகும் உள்ளடங்கலான அனைத்துத்தர பாரஃபின் மெழுகு |
| 98 | மழலைகளுக்கான தள்ளுவண்டிகள் (Perambulators) உள்ளிட்ட குழந்தைத் தொட்டில் வண்டிகள் அவற்றுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் உருளிகள், உருளிப்பட்டைகள் மற்றம் தொங்கல் பட்டைகள் |
| 99 | பெட்ரோமாக்ஸ் விளக்குகள் |
| 100 | நெடுநீள் குழாய்கள், வளையும் தன்மையுடைய குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்கள் உள்ளடங்கலான அனைத்து வகையிலான குழாய்கள், நெடுநீள் குழாய்கள் மற்றும் அதன் பொருத்திகள். |
| 101 | பிசா ரொட்டி (Pizza) |
| 102 | பிளாஸ்ட்டிக் நுண்மணித்துகள்கள், பிளாஸ்டிக்தூள், மாஸ்டர் பேட்சுகள் மற்றும் கழிவுகள் |
| 103 | பிளாஸ்டிக் மூலப் பொருள்கள் |
| 104 | அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட மாசு கட்டுப்பாட்டுச் சாதனங்கள் |
| 105 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத நாட்குறிப்பு, நாட்காட்டி உள்ளடங்கிய அச்சடிக்கப்பட்ட பொருட்கள் |
| 106 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத டோனர் மற்றும் கேட்ரிஜ் நீங்கலான செறிவுள்ளதாகவோ அல்லது திட நிலையாகவோ இருக்கிற அல்லது இல்லாதிருக்கிற அச்சு மை அல்லது வரைவதற்கான மை. |
| 107 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பழஜாம் ஜெல்லி, ஊறுகாய், பழபிழிச்சாறு, பழக்கலவை, பழபானம் மற்றும் பழச்சாறு (மூடிவைக்கப்பட்ட கொள்கலங்களில் அல்லது மற்றபடியானவை) உள்ளிட்ட பதப்படுத்தப்பட்ட பழம் மற்றும் காய்கறிகள் |
| 108 | பதப்படுத்தப்பட்ட இறைச்சி, பறவை இறைச்சி மற்றும் மீன் |
| 109 | மூங்கில் மரம், சர்க்கரை உற்பத்தி கழிவுப் பொருள்கள் மற்றும் காகிதம் ஆகியவற்றின் கூழ் |
| 110 | இந்த இணைப்புப் பட்டியலில் வேறெங்கும் குறித்துரைக்கப்படாத பருப்பு மற்றும் பயறு வகைகள். |
| 111 | கொயினா (Quinine) மற்றம் அதன் தயாரிப்புப் பொருள்கள் |
| 112 | ரயில் பெட்டிகள், என்ஜின்கள் மற்றும் பாரவண்டிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் |
| 113 | ஓட்டுடன் கூடிய அல்லது ஓடு உரிக்கப்படாத பச்சை முந்திரிகள், புத்தம் புதிய முந்திரிப் பருப்புகள் மற்றும் உலர்ந்த முந்திரி பருப்புகள் |
| 114 | வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பட்டு மற்றும் பட்டு நூல் இழைகள் |
| 115 | ஆயத்த ஆடைகள் |

| | |
|---|---|
| 116 | பயன்படுத்த தயார் நிலையில் உள்ள ஈர மாவு |
| 117 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத சக்தி புதுப்பிக்கும் கருவிகளும் மற்றும் உதிரிப்பாகங்களும் |
| 118 | ஆற்று மணல், மலைமண், செம்மண் மற்றும் சரளைக்கல் மண் |
| 119 | RMA தர நிலைகளையுடைய இரப்பர், இயற்கை இரப்பர், இரப்பர் பால், மடிப்புகளைக் கொண்ட உலர்ந்த இரப்பர் விரிப்புகள், மரத்திலிருந்து இறக்கியதான இரப்பர் பால், தரையில் விழும் கழிவுகள் அம்மோனியம் சேர்க்கை இரப்பர் பால், செறிவூட்டப்பட்ட இரப்பர் பால், மைய வேகச்சுழற்சியினால் பிரித்து எடுக்கப்பட்ட பால், உலர்ந்த சுருக்க மிதியடி இரப்பர், உலர்ந்த இரப்பர் பாளம், இரப்பர் சிறு துணுக்குகள், சீவப்பட்ட இரப்பர், அனைத்து வகைகளையும் தர நிலைகளையுமுடைய இரப்பர் பால், சீர்படுத்திய இரப்பர் அனைத்து வகைகள் மற்றும் தர நிலைகள் உடைய செயற்கை இரப்பர். |
| 120 | அனைத்து வகையிலுமாகிய ஜவ்வரிசி மற்றும் மாவுச் சத்து |
| 121 | தொழிலகப் பயன்பாட்டிற்கான உப்பு |
| 122 | துகள்கள் மற்றும் கழிவுகளாவன:-<br>(a) அலுமினியத் துகள்கள்<br>(b) உலோகமல்லாத துகள்கள், உலோகமல்லாத தகடு துகள்கள் அதாவது தாமிரத் துகள்கள், தாமிரக் கலவைத் துகள்கள், பித்தளைத் துகள்கள், ஈயம் மற்றும் ஈயக் கலவைத் துகள்கள் (இந்த இணைப்புப் பட்டியலில் வேறெங்கும் குறித்துரைக்கப்பட்டவையல்லாதவை)<br>(c) துணிக் கந்தைகள்<br>(d) கம்பளிக் கழிவுகள் (ஆட்டு உரோமம் மற்றும் அதுபோன்ற மிருகங்களின் உடலில் வளர்ந்துள்ள உரோம இழைகள்) மற்றும் கம்பளி இழைக் கழிவுகள்<br>(e) தேய்ந்த அல்லது அடிக்கப்பட்ட பழைய பித்தளை, தாமிரம் மற்றும் துருப்பிடிக்காத இரும்புப் பாத்திரங்கள்<br>(f) காகித அட்டடைக் கழிவுகள் |
| 123 | தையல் இயந்திரங்கள் அவற்றின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் |
| 124 | சர்பத் |
| 125 | கப்பல், படகுகள் மற்றும் தண்ணீர் மிதவைகள் |
| 126 | இலவம்பஞ்சு விதைகள் |
| 127 | பட்டுத்துணிகள் (கைத்தறித் துணிகள் நீங்கலாக), புகையிலை மற்றும் AED–ல் உள்ளடக்கப்பட்டிருந்தாலன்றி உள்ள துணிகள். |
| 128 | இயற்கை கரைப்பான் எண்ணெய் நீங்கலான பிற கரைப்பான் எண்ணெய் |
| 129 | மூக்குக் கண்ணாடிகள், பகுதிகள் மற்றும் உட்பாகங்கள், காண்டாக்ட் லென்ஸ்கள், லென்ஸ்சை தூய்மையாக்கும் பொருள் |
| 130 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பிற சீரகம், சோம்பு உள்ளடங்கிய அனைத்து வகையான மற்றும் அனைத்து வடிவத்திலும் உள்ள உணவுக்கு மணம் சேர்க்கும் பொருட்கள் |

| | |
|---|---|
| 131 | (i) உடைகள் மற்றும் காலணிகள் நீங்கலான தொங்கற்பதக்கங்கள், பதக்கங்கள், கோப்பைகள், வாகை நினைவுச் சின்னங்கள், விருது கேடயங்கள், முத்திரைப் பொறிப்புகள், உள்ளரங்க அல்லது திறந்தவெளி விளையாட்டுகளுக்கான பொருள்கள் உள்ளடங்கலான விளையாட்டுப் பொருள்கள்<br>(ii) குழந்தைகளுக்கான விளையாட்டுத் திடல் உபகரணங்கள் |
| 132 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத மாணவர் குறிப்பேடுகளும் மற்றும் நகல் பயிற்சி ஏடுகளும் |
| 133 | நிலக்கடலை, எள்ளு, அரிசிப் பொறி, வறுத்த கடலை மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள் மற்றும் முறுக்குகள் |
| 134 | புளியங்கொட்டை மற்றும் பவுடர் |
| 135 | இயற்கைத் தாவரத்தினாலான தோல் பதனிடும் பொருள்கள் |
| 136 | மரவள்ளிக் கிழங்கு மாவு |
| 137 | தேயிலை |
| 138 | உபகரணங்கள் (Tools) |
| 139 | மின்னணு விளையாட்டு பொம்மைகள் அல்லாத விளையாட்டு பொம்மைகள் |
| 140 | (i) உருள் தடம் மீது ஊர்ந்துச் செல்லும் இயந்திரக் கலப்பைகள் நீங்கலான அனைத்துவகை இயற்திரக் கலப்பைகள் மற்றும் பொதுவாக இயற்திரக் கலப்பைகளில் பாகங்களாகவும் துணைக் கருவிகளாகவும் பயன்படுத்துவதற்காக ஏற்றுக் கொள்ளப்படும் (மின்கலன்கள் நீங்கலாக) பிற உருப்படிகளும் அவற்றோடு சேர்த்துப் பயன்படுத்தப்படும் கருவிகளும் சாதனங்களும்.<br>(ii) அனைத்து வகை இயந்திரக் கலப்பைகளின் இழுவைகள்<br>(iii) விசை உழு கருவிகள், சூட்டடிப்பு இயந்திரம், ஒட்டுமொத்த அறுவடை இயந்திரங்கள் மற்றும் நாற்று நடும் இயந்திரம்<br>(iv) - (i),(ii), & (iii) இல் குறிப்பிட்டவைகளான பொருத்திகளும் பாகங்களும் |
| 141 | மின்னியல் விசை மாற்றிகள். |
| 142 | ஒளிபரப்பும் கம்பிகள் மற்றும் கோபுரங்கள் |
| 143 | கடற்கரை மற்றும் தோட்டக்குடைகள் மற்றும் மடிப்புக் குடைகள் உள்ளிட்ட அனைத்துவகை குடைகளும் அவற்றின் பாகங்களும் |
| 144 | வனஸ்பதி (நீரகவாடி சேர்க்கப்பட்ட தாவர எண்ணெய்) |
| 145 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத தாவர எண்ணெய் மற்றும் புண்ணாக்கு |
| 146 | நான்காம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத வணிகச் சின்னம் இடப்பட்டு விற்கப்படும் அனைத்து வகையான காய்கறி வத்தல்கள் |
| 147 | ஈரப் பேரிச்சம்பழம் |
| 148 | கோதுமை |
| 149 | கோதுமை மாவு, ஆட்டா, மைதா மற்றும் ரவா (சூஜி) |
| 150 | தண்ணீரை இறைப்பதற்கு மற்றும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக உள்ள காற்றாலை |

## பிரிவு – C

**(3–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவைக் காணவும்)**

நூற்றுக்கு 12.5 விழுக்காடு வீதத்தில் வரிவிதிக்கத்தக்க பொருட்கள்

நான்காம் இணைப்புப் பட்டியலில் விலக்களிக்கப்பட்டவையல்லாத, இரண்டாம் இணைப்புப் பட்டியலில் மற்றும் முதலாம் இணைப்புப் பட்டியலின் பகுதி – A மற்றும் பகுதி B யில் குறித்துரைக்கப் பட்டவையல்லாத பிற அனைத்துப் பொருட்கள்.

## இரண்டாம் இணைப்புப் பட்டியல்

**( 3–ஆம் பிரிவின் (5)–ஆம் உட்பிரிவைக் காண்க)**

| வரிசை எண். | பொருட்களின் விவரம் | வரிவிதிப்பு முனை | வரிவீதம் |
|---|---|---|---|
| 1. | 3–ஆம் இனத்தின் கீழ் வருகின்ற வெளிநாட்டு மதுபான வகை நீங்கலாக, வெளிமாநிலத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட/ முயன்று பெறப்பட்ட/ கொண்டுவரப்பட்ட மனித நுகர்விற்கான அனைத்து வகையான மதுபானங்கள் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 58 விழுக்காடு |
| 2. | வரிசை எண் 1 மற்றும் 3–ஆம் இனங்களின் கீழ் வருகின்ற மதுபானங்கள் நீங்கலாக மனித நுகர்விற்கான அனைத்து வகையான மதுபானங்கள் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 58 விழுக்காடு |
| | | இம்மாநிலத்தில் இரண்டாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 38 விழுக்காடு |
| 3. | வெளிநாட்டு மதுபானங்கள் அதாவது அயல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுவதும், 1934–ஆம் ஆண்டு இந்திய சுங்கவரிச் சட்டம் (மையச் சட்டம் 32/1934) அல்லது இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான சுங்கவரிகள் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனின் கீழ் அடங்குவதுமான ஒயின், சாராவி மற்றும் பீர். | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 73 விழுக்காடு |

| | | | |
|---|---|---|---|
| 4. | வானூர்தி கல்லெண்ணெய் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 29 விழுக்காடு |
| 5. | (i) ஜெட் எரிவாயு உள்ளடங்கலான வானூர்தி விசை எரிபொருள்.<br>(ii) டர்போ–பிராப் வானூர்தி உள்ளடங்கலான விற்கப்பட்ட வானூர்தி விசை எரிபொருள் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 29 விழுக்காடு<br>நூற்றுக்கு 4 விழுக்காடு |
| 6. | பெட்ரோல் சேர்மங்களுடனோ அல்லது இல்லாமலோ | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 30 விழுக்காடு |
| 7. | உயர்வேக டீசல் எண்ணெய் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 23.43 விழுக்காடு |
| 8. | பளுவற்ற டீசல் எண்ணெய் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 25 விழுக்காடு |
| 9. | பொது பங்கீடு முறையில் விற்கப்பட்டவை அல்லாத பிற மண்ணெண்ணெய் | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 25 விழுக்காடு |
| 10 | கருப்பஞ்சாற்றுக் கழிவு | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 30 விழுக்காடு |
| 11 | இந்தியாவில் தயாரிக்கப்படாத அல்லது உற்பத்தி செய்யப்படாத சர்க்கரை, துணி மற்றும் புகையிலைப் பொருள்கள். | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 4 விழுக்காடு |
| 12 | கரும்பு | கடைசிக் கொள்முதல் முனையில் | மெட்ரிக்டன் ஒன்றுக்கு ரூ.60 |

***<u>விளக்கம்–I</u>***: வரிசை எண் 2–இல் உள்ள இனத்திற்காக, மாநிலத்தில் இரண்டாம் விற்பனை முனையில், வரி விதிக்கும் நோக்கத்திற்காக, வரி விதிப்புக்குள்ளாகிற பொருள்களின் விற்பனைத் தொகையானது, முதலாம் விற்பனை முனையில் வரிவிதிக்கப்பட்டுள்ள அத்தகைய பொருள்களின் விற்பனைத் தொகையை கழித்த பின்னர் எட்டப்படுதல் வேண்டும்.

***விளக்கம்–II***: இந்த இணைப்புப் பட்டியலிலுள்ள பெட்ரோலியம் தயாரிப்புகளின் நோக்கத்திற்காக, ஒரு எண்ணெய் நிறுவனத்திலிருந்து மற்றொரு எண்ணெய் நிறுவனத்திற்கு செய்யப்படும் விற்பனையானது, இம்மாநிலத்தின் முதல் விற்பனை எனக் கொள்ள முடியாது மற்றும் அதற்கிணங்கிய வகையில் (எண்ணெய் நிறுவனம் அல்லாத) ஒரு எண்ணெய் நிறுவனத்திலிருந்து மற்றொரு வணிகருக்கு செய்யப்படும் விற்பனை எதுவும் இம்மாநிலத்தில் முதல் விற்பனையாகக் கருதப்படும்.

***விளக்கம்–III:*** **II**-ஆம் விளக்கத்தின் நோக்கத்திற்காக எண்ணெய் நிறுமம் என்பது a) சென்னை பெட்ரோலியக்கழகம் (வரையறுக்கப்பட்டது), b) இந்தியன் எண்ணெய்க் கழகம் (வரையறுக்கப்பட்டது), c) பாரத் பெட்ரோலியக் கழகம் (வரையறுக்கப்பட்டது), d) இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம் (வரையறுக்கப்பட்டது), e) இந்தோ–பர்மா பெட்ரோலிய நிறுவகம் (வரையறுக்கப்பட்டது), f) கொச்சி சுத்திகரிப்பு நிலையம் (வரையறுக்கப்பட்டது) மற்றும் தமிழ்நாடு அரசிதழில் அரசினால் இதுகுறித்து அறிவிக்கை செய்யப்படும் பிற எண்ணெய் நிறுவனம் எதனையும் உள்ளடக்கும்.

## மூன்றாம் இணைப்புப் பட்டியல்

**(8– ஆம் பிரிவைக் காண்க)**

**(உணவகங்கள், உணவு விடுதிகள், இனிப்பகங்களுக்கு விதிப்பக்கப்படும் இணக்க வரி வீதம் )**

| வரிசை எண் | விற்பனைத் தொகை படிமுறை வீதம் | வரிவீதம் |
|---|---|---|
| (i) | மொத்த விற்பனைத் தொகை, பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் இருபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாதவிடத்து | ஆண்டொன்றுக்கு பன்னிரண்டாயிரம் ரூபாய் |
| (ii) | மொத்த விற்பனைத் தொகை இருபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதவிடத்து | ஆண்டொன்றுக்கு இருபத்து நான்காயிரம் ரூபாய் |
| (iii) | மொத்த விற்பனைத் தொகை முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் நாற்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதவிடத்து | ஆண்டொன்றுக்கு முப்பத்தாறாயிரம் ரூபாய் |
| (iv) | மொத்த விற்பனைத் தொகை நாற்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதவிடத்து | ஆண்டொன்றுக்கு நாற்பத்தெட்டாயிரம் ரூபாய் |

**விளக்கம்.–** மொத்த விற்பனைத் தொகையைக் கணக்கிடுகின்ற நோக்கங்களுக்காக, இந்தச் சட்டத்தின் 12–ஆம் பிரிவின்படி வரிவிதிக்கத்தக்க கொள்முதல் தொகையானது, விற்பனை தொகையோடு சேர்க்கப்படுதல் வேண்டும்.

## நான்காம் இணைப்புப் பட்டியல்

## 15– ஆம் பிரிவினால் விலக்களிக்கப்பட்ட பொருள்கள்

## பகுதி A

1957– ஆம் ஆண்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் (தனி முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள்) சட்டத்தின் (மையச் சட்டம் 58/1957) முதலாம் இணைப்புப்பட்டியலின் உள்ளடங்கிய இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள்.

1. (i) கரும்பு அல்லது பீட் சர்க்கரை மற்றும் திட வடிவிலான இரசாயனத்தால் சுத்தம் செய்யப்பட்ட கருப்பு வெல்லம்.
   (ii) பனஞ்சர்க்கரை

2. (i) உற்பத்தி செய்யப்படாத கச்சா புகையிலை மற்றும் புகையிலை கழிவு

   (ii) சுருட்டுகள் மற்றும் சிகரெட்டுகள் சிறிய மெல்லிய சுருட்டுகள் புகையிலை அல்லது புகையிலைக்குப் பதிலாக அமைந்தவற்றால் ஆன புகைப்பொருட்களால் ஆன புகைச் சுருள்கள்

   (iii) பிறவாறு உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை, அதாவது

   (a) புகைக்குழாய்கள் மற்றும் சிகரெட்டுகளுக்குரிய புகையிலைக் கலவை
   (b) புகையிலைப் பீடிகள்
   (c) மெல்லக் கூடிய புகையிலை
   (d) புகையிலையினாலான மூக்குப்பொடி மற்றும் புகையிலையினாலான மூக்குப்பொடியைக் கொண்டிருக்கிற தயாரிப்புகள்
   (e) வெட்டப்பட்ட புகையிலை

3. பட்டு மற்றும் பட்டுக் கழிவினால் நெய்யப்பட்ட துணிகள்.

4. (i) முடிவார்ப்பட்டைகள் நீங்கலாக நெய்யப்பட்ட நார்க் கம்பளித் துணிகள்

(ii) முடிவார்ப்பட்டைகள் நீங்கலாக சீர்செய்து நெய்யப்பட்ட கம்பளித் துணிகள்

5. நெய்யப்பட்ட பருத்தித் துணிகள்

6. (i) செயற்கைச் சேர்ம இழை நூலினாலான நெய்யப்பட்ட துணிகள்

(ii) செயற்கை இழை நூலினாலான நெய்யப்பட்ட துணிகள்

7. (i) செயற்கைச் சேர்மத் தரநிலை இழையினால் நெய்யப்பட்ட துணிகள்

(ii) செயற்கைத் தரநிலை இழையினால் நெய்யப்பட்ட துணிகள்

8. (i) கம்பளி, பருத்தி அல்லது மனிதத் தயாரிப்பு இழையினால் நெய்யப்பட்ட அடுக்குத் துணிகள் மற்றும் மெத்தென்ற வகைத் துணிகள்

(ii) பூத்துவாலைத் துணிகள் மற்றும் அதைப் போன்று நெய்யப்பட்ட பூமெத்தைத் துணிகள் மற்றும் கொத்து வகைத் துணிகள்

(iii) மென்வலைத் துணி

(iv) பருத்தி அல்லது மனிதத் தயாரிப்பு இழையினாலான பூவணிகளில், நீள்கண்டுகளில் அல்லது பூவேலைத் துண்டுகளில் பூவேலைப்பாடுகள்

(v) பூத்தையல் வேலை செய்த பூவணிகள், நீள்துண்டுகள் அல்லது பூவேலைத் துண்டுகள்

(vi) குறுகலான நெசவுத் துணிகள்

9. (i) புத்தகங்களில் வெளி அட்டைகள் அல்லது அதைப் போன்றவற்றிற்கு உபயோகப்படுத்தப்படும் பசை அல்லது மாவுச் சத்துக்கள் பூசப்பட்ட நெசவுத் துணிகள் மற்றும் நகலெடுக்கும் துணிச் சித்திரம் வரைய தயார் செய்யப்பட்ட கித்தான், பசையூட்டப்பட்ட அல்லது அதைப் போன்ற விறைப்பாக்கப்பட்ட நெசவுத்துணி

(ii) நைலான் முறுக்கு நூலினால் ஆன உருளிகளில் பயன்படுத்தப்படும் நூலிழைத் துணிகள் அல்லது பாலியமைட்டுகள், பாலியஸ்டர்கள் அல்லது விஸ்கோஸ் ரேயான் துணிகள்

(iii) பிளாஸ்டிக்கினால் செறியூட்டப்பட்ட, மேற்பூச்சுடைய, மேற்பரப்பப்பட்ட அல்லது பளபளப்பூட்டப்பட்ட, பருத்தி மற்றும் நெசவுத் துணிகள்

(iv) பருத்தி அல்லது மனிதத் தயாரிப்பு நெசவுப் பொருட்களாலான ஆதாரத் துணி மீது துணிக் கற்றை அல்லது துணிக் கற்றைக் கொண்ட தயாரிப்புகளால் பகுதியாக அல்லது முழுவதுமாக மேற்பரப்பப்பட்ட துணிகள்

10. நீள் அடுக்குத் துணிகள் உள்ளடங்கலான, அடுக்குத் துணிகள் மற்றும் பின்னப்பட்ட அல்லது கொக்கி ஊசி மூலம் பின்னப்பட்ட பூத்துவாலைத் துணிகள்.

## பகுதி – B

### 15– ஆம் பிரிவினால் விலக்களிக்கப்பட்ட பொருள்கள்

| வரிசை எண் | பொருட்களின் விவரிப்பு |
|---|---|
| 1 | அரசால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான மனித சக்தியால் அல்லது விலங்கு மூலமாகச் செயற்படும் அல்லது இயக்கப்படும் வேளாண்மைக் கருவிகள் |
| 2 | அரசால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான ஊனமுற்ற நபர்களுக்கான துணைக்கருவிகள் மற்றும் கருவிகள் |
| 3 | அழுத்தம் மற்றும் மின்சாரம் மூலமாக இயக்கப்படுபவை அல்லாத வீட்டு உபயோக அலுமினிய பாத்திரங்கள் |
| 4 | அப்பளம், பப்படம், வடாம் மற்றும் வற்றல் |

| | |
|---|---|
| 5 | துணை உணவு செறிவுப் பொருள்கள், கூடுதல் சேர்க்கை உணவுகள், கோதுமை தவிடு, எண்ணெய் நீக்கப்பட்ட புண்ணாக்கு, உலர் புல், வைக்கோல், உள்ளடங்கலான கடல்வாழ் உயிரின் உணவு, பறவைகளுக்கான உணவு, கால்நடைகளுக்கான உணவு மற்றும் விலங்குகளுக்கான உணவுப் பொருட்கள் |
| 6 | கடல் சிப்பிகளால் செய்யப்பட்ட பொருள்கள் |
| 7 | வேளாண்மை நோக்கத்திற்கான பாக்டீரியா வளர்ப்புகள், தழைச்சத்து எரு, எண்ணெய்வித்துக்கள் அல்லாத, ஆனால் பச்சை எரு விதைகள் உள்ளடங்கிய அனைத்து வகை விதைகள் |
| 8 | சர்க்கரை உற்பத்திக் கழிவுப் பொருள்கள் |
| 9 | விலையுயர்ந்த உலோகங்களால் செய்யப்பட்டவை அல்லாத வளையல்கள் |
| 10 | இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பிற திண்பதற்கான கருப்புக் கரும்பு |
| 11 | பூகோள வரைபடங்கள், எழுது வரைபடங்கள், பார்வையற்றோர் பயன்படுத்தும் புத்தகங்கள் மற்றும் பூமி உருண்டை உள்ளடங்கலான புத்தகங்கள், படிக்கும் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், காலமுறை வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகள் |
| 12 | ரொட்டி (வணிகச் சின்னமிடப்பட்ட அல்லது பிறவாக) |
| 13 | துடைப்பக் குச்சிகள் |
| 14 | மெழுகுவர்த்திகள் |
| 15 | விலங்குகளால் இழுக்கப்படும் வண்டி மற்றும் கை வண்டிகள் |
| 16 | கரி |
| 17 | இராட்டைகள், அம்பர் இராட்டைகள், கைத்தறி கை நூற்பு இழை, கைத்தறித் துணி மற்றும் காந்தி தொப்பி |

| | |
|---|---|
| 18 | மிளகாய் வத்தல், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம், சீயக்காய், சீயக்காய்த் தூள், வெல்லத்தூள் மற்றும் நாட்டுச் சர்க்கரை உள்ளடங்கலான வெல்லம் மற்றும் வெல்லப்பாகு ஆகியவற்றின் விற்பனையை பொறுத்தளவில் ஓராண்டில் முந்நூறு கோடி ரூபாய்களுக்கு மேற்படாத அளவிலான விற்பனை தொகை கொண்ட வணிகர் ஒருவரால் விற்பனைச் செய்யப்படும் மேற்சொன்ன பொருள்கள் |
| 19 | பருவட்டான தானியங்கள், நெல் மற்றும் உமி நீக்கிய அரிசி உள்ளடங்கிய அரிசி |
| 20 | ஆணுறைகள் மற்றும் கருத்தடைச் சாதனங்கள் |
| 21 | வணிகச் சின்னமிடப்படாத தயிர், லஸ்ஸி, மோர் பிரித்தெடுக்கப்பட்ட பால் மற்றும் வெண்ணெய் |
| 22 | சைக்கிள் ரிக்ஷா (மோட்டார் அல்லாதவை) |
| 23 | மட்பாண்டங்கள் மற்றும் மட்பாண்ட வகைகள் |
| 24 | வாக்காளர் பட்டியல் |
| 25 | மின்சக்தி |
| 26 | (i) சக்தி சேமிப்பு சூளைகள் (ii) சூரிய வெப்ப அடுப்புகள் (iii) நகராட்சிக் குப்பைகள், சக்தி தயாரிக்கும் மாற்றியமைக்கும் கருவிகள் |
| 27 | சவுக்கு மற்றும் தைல மரம் அல்லாத விறகு |
| 28 | மீன்வலை மற்றும் மீன் வலைக்கான துணிகள், மீன் பிடி கொக்கிகள், மீன்விதைகள், இறால் மற்றும் கூனிரால் விதைகள் |
| 29 | செங்கல் தயாரிப்பாளருக்கு விற்பனை செய்யப்படும் சாம்பல் துகள் |
| 30 | இருநூறு ரூபாய்க்கு குறைந்த விற்பனை மதிப்புடைய காலனி |
| 31 | புதிய பால், கொதிக்கவைத்துக் குளிரப்படுத்தும் முறையில் கிருமி நீக்கப்பட்ட பால் மற்றும் நேரடியாக கலக்கப்பட்ட பால். |
| 32 | புதிய செடிகள், மரக்கன்றுகள், புத்தம் புதிய பூக்கள் மற்றும் பச்சை இலைகள், பச்சைத் தேயிலைகள், வெற்றிலைகள் மற்றும் வாழை இலைகள் |
| 33 | உருளைக் கிழங்குகள், மரவள்ளி கிழங்கு மற்றும் புதிய பழங்கள் உள்ளடங்கலான பச்சைக் காய்கறிகள் |
| 34 | பூண்டு மற்றும் இஞ்சி |

| | |
|---|---|
| 35 | ஆண்டொன்றுக்கு ரூபாய் நூறு கோடிக்கும் மிகாமல் மொத்த விற்பனைத் தொகை கொண்ட வணிகர்கள் விசைத்தறி மூலம் தயாரித்து விற்பனை செய்யும் வலைத்துணி பட்டைகள் மற்றும் கட்டுப்போடுவதற்கான துணிகள் |
| 36 | பொது வினியோக முறையில் உள்ள பொருட்கள் (மண்ணெண்ணெய் தவிர) |
| 37 | கிராமப்புற கருமான்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் அரசால் அறிவிக்கைச் செய்யப்பட்டவாறான அடிசரக்குப் பொருட்கள் |
| 38 | உற்பத்தி செய்யப்பட்ட பின்னரோ அல்லது பிறவாரோ மறு ஏற்றுமதிக்காக சுங்க முறையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் |
| 39 | வில்லைகள் அல்லது குச்சி வடிவிலான உடனடி சாம்பிராணி உள்ளடங்கலான சாம்பிராணி |
| 40 | கைவினைப் பொருட்கள் |
| 41 | கையினால் அல்லது கைத்தறியால் செய்யப்பட்ட பின்னல் தூரிகள், கயிற்று பாய்கள் மற்றும் ஜமுக்காளங்கள் |
| 42 | கைப்பம்புகள், பாகங்கள் மற்றும் பொருத்திகள் |
| 43 | பகுதி இயந்திரத்தினால் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு தீக்குச்சிகள் உள்ளடங்கலான கையால் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு தீக்குச்சிகள் |
| 44 | சிட்டா நூல் |
| 45 | இரத்தத்தில் அடங்கிய பொருள்கள் மற்றும் இரத்தத்தில் உள்ள பிளாஸ்மா உள்ளடங்கலான மனித இரத்தம் |
| 46 | (i) அரிக்கேன் விளக்குகள் மற்றும் எண்ணெயில் எரியும் படுக்கை அறை விளக்குகள்<br>(ii) மண்ணெண்ணெய் விளக்குகள் (கேஸ் விளக்குகள் மற்றும் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் அல்லாதவை)<br>(iii) மண்ணெண்ணெய் அடுப்புகள்<br>(iv) மேற்குறிப்பிட்ட பொருள்களில் திரிகள் மற்றும் கண்ணாடிக் குடுவைகள் உள்ளடங்கலான பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் |
| 47 | இந்திய இசைக் கருவிகள் மற்றும் உள்நாட்டில் கையினால் தயாரிக்கப்பட்ட இசைக் கருவிகள் |
| 48 | உள்நாட்டு பட்டுப்புழு தயாரிப்புகள் |
| 49 | அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட கதர் ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிப்புகள் |
| 50 | குங்குமம், கண் மை, நெற்றிப்பொட்டு, கால் நச்சு மை மற்றும் சிந்தூர் |

| | |
|---|---|
| 51 | முழுவதும் தமிழ் வாசகம் அடங்கிய உரிமம் பெற்ற மென்பொருள் |
| 52 | அரசினால் அறிவிக்கை செய்யப்படும் உயிர் காக்கும் மருந்துகள் |
| 53 | வணிகச் சின்னம் இடப்படாத எண்ணெய் கலந்தோ அல்லது வேறு கூட்டுப் பொருட்களுடனோ அல்லது அவ்வாறில்லாமலோ விற்கப்படும் மசாலாத்தூள் அல்லது குழம்புக்கலவை |
| 54 | வணிகச் சின்னமிடப்பட்ட, பதப்படுத்தப்பட்ட, சிப்பங்கட்டப்பட்ட பொருட்கள் அல்லாத மீன், இறால் மற்றும் பிறவகையான கடல் உணவுப் பொருட்கள் மற்றும் முட்டைகள், கோழி இறைச்சி மற்றும் பந்தயத்திற்கான குதிரைகள் அல்லாத விலங்குகள் |
| 55 | (a) வெள்ளியினால் செய்யப்பட்ட மெட்டி, சலங்கை மற்றும் அரைஞாண்கயிறு<br>(b) இணைப்புகளுடன் சேர்த்து 8 கிராம்கள் எடைக்கு மிகைப்படாமல், ஆனால் சங்கிலியில்லாத, தங்கத் தாலி<br>(c) வேப்பம் புண்ணாக்கு<br>(d) 50 கிராம் எடைக்கு குறைவான அடைக்கப்பட்ட ஊறுகாய்கள்<br>(e) பொது விநியோக முறையில் விற்பனை செய்யப்படும் கோதுமை<br>(f) இந்த சட்டத்தின் கீழ் வரி செலுத்தும் கடப்பாடு உடைய பதிவுப் பெற்ற வணிகரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட காகிதத்தில் தயார் செய்யப்பட்ட மாணவர் குறிப்பேடுகள் மற்றும் நகல் பயிற்சி ஏடுகள்<br>(g) தமிழ் தினசரி காலண்டர்கள் மற்றும்<br>(h) UNICEF வாழ்த்து அட்டைகள் மற்றும் காலண்டர்கள் |
| 56 | தேசியக் கொடி |
| 57 | அரசு கருவூலங்களின் அல்லது விற்பனையாளர்கள் மூலம் விற்கப்படும் நீதிமன்றஞ்சாரா முத்திரைத்தாள்கள், அரசு விற்கும் அஞ்சல் இனங்களான அஞ்சல் உறை, அஞ்சல் அட்டை முதலானவை இந்திய ரிசர்வ் வங்கிக்கு விற்பனை செய்யப்படும் ரூபாய் நோட்டுக்கள் மற்றும் உதிரியாகவோ அல்லது புத்தக வடிவிலோ உள்ள காசோலைகள் |
| 58 | சமய நிறுவனங்களால் வழங்கப்படும் பஞ்சாமிர்தம், நாமக்கட்டி, விபூதி மற்றும் பிரசாதம் |
| 59 | காகிதப் பைகள் மற்றும் காகித உறைகள் (அச்சிட்டிருப்பினும், இல்லாவிடினும்) |
| 60 | தானிய தயாரிப்புகள் (மாவு, உடைந்த சோளம் மற்றும் சோளத் தவுடு, கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரை வாலி மற்றும் மைலோ) |

| | |
|---|---|
| 61 | (i) முதலாம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடாத பனைத் தொழில் தயாரிப்புகள் மற்றும் பனை இலை, தென்னை ஓலை மற்றும் ஈச்சம் ஓலைகளால் ஆன கூடைகள், பாய்கள், தூரிகைகள், விசிறிகள் மற்றும் தட்டி, கூடை, முறம் மற்றும் மூங்கில், பிரம்பு, பனை நார் இழை மற்றும் தண்டுகள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பிறபொருள்கள், உலர்ந்த இலைகள் (மந்தார இலைகள்), தென்னங்கீற்றுகள், கோரைப்புல் மற்றும் கோரைப்பாய்கள், கயிறு, கயிற்றுத்துகள்கள், கயிறு இழைகள், கயிற்று நூல் மற்றும் கயிற்றுமி (கயிறு தயாரிப்புகள் நீங்கலாக), தக்கண சணல் பொருள்கள் நீங்கலாக தக்கண சணல் நார், துடைப்பம் மற்றும் தொன்னை (ii) மரவள்ளிக்கிழங்கு கப்பி, மரவள்ளிக் கிழங்கு திப்பி, நிலக்கடலைத் தோல், தேங்காய் ஓடு மற்றும் அவற்றின் சீவல்கள் (iii) பஞ்சு கயிறு, புளிச்சக்கீரைக் கயிறு மற்றும் பின்னப்பட்ட கயிறு (iv) பஞ்சு விதை உமி, தேங்காய் மட்டை மற்றும் நெல் உமி (v) பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு (vi) கற்கண்டு மற்றும் நாட்டுச் சர்க்கரை |
| 62 | அரிசிப் பொரி, தட்டையாக்கப்பட்ட அரிசி அல்லது அவல், அரிசித் தவிடு, சர்க்கரை அல்லது பாகு சேர்க்கப்பட்ட பொரித்த நெல் அல்லது அரிசி, அரிசி மாவு மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட அரிசித் தவிடு |
| 63 | பச்சை கம்பளி மற்றும் மிருக உரோமம் |
| 64 | இரப்பராலான விளையாட்டு பந்துகள் மற்றும் பலூன்கள் |
| 65 | ஓராண்டில் முந்நூறு கோடி ரூபாய்களுக்கு மேற்படாத அளவில் பின்வரும் தாவர எண்ணெய்களின் விற்பனையைப் பொறுத்த அளவில் மொத்த விற்பனை கொண்டிருக்கிற வணிகர் எவராலும் செய்யப்படும் அப்பொருள்களின் விற்பனை<br>1) தேங்காயெண்ணெய், 2) நல்லெண்ணெய், 3) கடலைஎண்ணெய், 4) சூரியகாந்தி எண்ணெய், 5) பருத்தி விதை எண்ணெய், 6) அரிசி தவிட்டு எண்ணெய், 7) மேற்சொன்ன 1 முதல் 6 வரையிலான எண்ணெய்களின் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் 8) சுத்திகரிக்கப்பட்ட பனை எண்ணெய் |
| 66 | ஓராண்டில் முந்நூறு கோடி ரூபாய்களுக்கு மேற்படாத அளவில் எண்ணெய் நீக்கம் செய்யப்பட்ட எண்ணெய் பிண்ணாக்குகள் உள்ளடங்கலான எண்ணெய் பிண்ணாக்குகளின் விற்பனையைப் பொறுத்த அளவில் மொத்த விற்பனை கொண்டிருக்கிற வணிகர் எவராலும் செய்யப்படும் விற்பனை |

| | |
|---|---|
| 67 | ஓராண்டில் முந்நூறு கோடி ரூபாய்களுக்கு மேற்படாத அளவில் உடைந்த, உமி மற்றும் துகள்கள் உள்ளடங்கிய பட்டாணி மற்றும் பட்டாணி பருப்புகளின் விற்பனையைப் பொறுத்த அளவில் மொத்த விற்பனை கொண்டிருக்கிற வணிகர் எவராலும் செய்யப்படும் விற்பனை |
| 68 | ஓராண்டில் முந்நூறு கோடி ரூபாய்களுக்கு மேற்படாத அளவில் சிதைந்த, உடைத்த மாவு, உமி மற்றும் அவற்றின் தூள் மற்றும் அவற்றால் செய்யப்பட்ட பொரித்த மற்றும் வறுத்த பருப்பு வகைகள் உள்ளடங்கலான பின்வரும் பயறு மற்றும் பருப்பு வகைகளைப் பொறுத்த அளவில் மொத்த விற்பனை கொண்டிருக்கிற வணிகர் எவராலும் செய்யப்படும் விற்பனை<br>1) கடலை,<br>2) துவரை,<br>3) பச்சைப்பயறு,<br>4) மசூர்,<br>5) உளுந்து,<br>6) மோத்து , 7)கேசரி |
| 69 | தொழிலகப் பயன்பாட்டுக்குரிய உப்பு அல்லாத மனித உபயோகத்திற்குப் பயன்படும் அயோடின் சேர்க்கப்பட்ட அல்லது சத்தூட்டப் பெற்ற உப்பு (வணிகச் சின்னம் உள்ள அல்லது பிறவாறானது) |
| 70 | புடவை விளிம்புப் பட்டிகள் |
| 71 | எண்ணெய்வித்துக்கள் அல்லாத அனைத்து வகை விதைகள் |
| 72 | உறைவிந்து உள்ளடங்கலான விந்து |
| 73 | பட்டுப்புழு வளர்த்தல், பட்டுப்புழுக்கூடு மற்றும் உள்நாட்டுக் கச்சாப்பட்டு மற்றும் பட்டு இழை உள்ளடங்கலான கச்சாப்பட்டு |
| 74 | எழுதுபலகை, பலப்பங்கள் மற்றும் சுண்ணாம்புக் கட்டிகள் |
| 75 | நீராவி |
| 76 | கைத்தறி மற்றும் ஆலையில் தயாரித்து தைக்கப்பட்ட கைக்குட்டைகள் |
| 77 | இளநீர் |
| 78 | கள், பதநீர் மற்றும் சாராயம் |

| | |
|---|---|
| 79 | சேமியா |
| 80 | காற்றூட்டப்பட்ட நீர், கனிம நீர், சுத்திகரிக்கப்பட்ட நீர், மருத்துவ குணமுள்ள நீர், அயனி நீர், மின்கல நீர், கனிமச் சத்து நீக்கப்பட்ட நீர் நீங்கலான பிற நீர் மற்றும் மூடிய கொள்கலத்தில் விற்கப்படும் நீர் |
| 81 | எழுது பொருள்கள், பென்சில்கள், பென்சில் சீவுகருவிகள், பேனாக்கள், பந்துமுனைப் பேனாக்கள், ரீஃபிள்கள், துருப்பிடிக்காத இரும்பினால் ஆன பேனா முனைகள், வண்ண பென்சில்கள், கரும்பலகைகள், தூசித் துடைப்பான்கள், ஜியோமிதிப்பெட்டிகள், அறுத்து ஆய்வு செய்யும் கருவிகள் அடங்கிய பெட்டிகள் |

## ஐந்தாம் இணைப்புப்பட்டியல்

**(18—ஆம் பிரிவுகள் (1) —ஆம் உட்பிரிவைக் காண்க)**

பன்னாட்டு நிறுவனங்களின் பட்டியல் — பூஜ்ய வரி வீத விற்பனை

| வரிசை எண் | பன்னாட்டு நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1 | பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகம் |
| 2 | ஐக்கிய நாட்டு குழந்தைகள் நல நிதியம் |
| 3 | ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டம் |
| 4 | ஐக்கிய நாட்டு கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் |
| 5 | ஐக்கிய நாட்டு உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் |
| 6 | ஐக்கிய நாட்டு தகவல் பணியம் |
| 7 | இந்தியாவிலுள்ள ஐக்கிய நாட்டு இராணுவ பார்வையாளர்கள் குழு |
| 8 | ஐக்கிய நாட்டு மக்கள் தொகை கணக்கீட்டு ஆய்வு அலுவலகம் |
| 9 | ஐக்கிய நாட்டு தொழில்நுட்ப உதவி வாரியம் |
| 10 | உலக சுகாதார நிறுவனம் |
| 11 | உலக வங்கி |

## ஆறாம் இணைப்புப் பட்டியல்

**(70–ஆம் பிரிவைக் காண்க)**

**(கடப்புச் சீட்டு)**

| வரிசை எண் | பொருட்களின் பெயர் |
|---|---|
| 1 | டீசல் எஞ்ஜின்கள் |
| 2 | சலவைக் கற்கள் |
| 3 | கச்சா ரப்பர் |
| 4 | குளிர்சாதனப் பெட்டி, காற்றுப் பதனப் பெட்டி, குளிர் காற்றுச் சாதனம், நீரினால் குளிர்விக்கும் கருவிகள் |
| 5 | சலவை இயந்திரங்கள் |
| 6 | கள், சாராயம் நீங்கலான மனித நுகர்விற்கான அனைத்து வகையான பிற மதுபானங்கள் |
| 7 | வெளிநாட்டு மதுபானங்கள், அதாவது அயல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுவதும், 1934–ஆம் ஆண்டு இந்தியா சுங்க வரிச் சட்டத்தில் (மையச் சட்டம் 32/1934) அல்லது இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான சுங்க வரிகள் தொடர்பாக இப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனின் கீழ் அடங்குவதுமான ஒயின், சாராவி மற்றும் பீர் |
| 8 | மண்ணெண்ணெய் |
| 9 | அனைத்து வகைகளிலான பிளாஸ்டிக் நுண்மணித் துகள்கள் மற்றும் பினாஸ்டிக் மூலக் கச்சாப் பொருட்கள் |